மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மக்களின் பாவங்களைத் தீர்ப்பதற்கு அந்தத் தீர்த்தமலை இருக்கிறது என்று சொன்னால், அங்கே போகின்றவர்கள் அனைவரும் பாவங்களைச் செய்தவர்கள் என்று கருதப்படுவார்கள். அது, அங்கே நல்ல மருத்துவத் துறைக்குப் பயன்படுகிற மருந்து மூலிகைகளில் இருந்து உருவாகி வரும் தீர்த்தம் என்று பெயர் பெற்று இருக்கிறது. அதையொட்டி அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, மக்களின் குறைகளைத் தீர்க்கும் ஸ்தலமாக அந்தத் தீர்த்தமலை விளங்குகிறது என்று நண்பர் சமரசம் அவர்கள் கூறினார்கள். அப்படி ஏதேனும் குறைகளை அங்கு சென்று அவர் தீர்த்து வைத்துக் கொண்டாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, யார் பாவத்தைச் செய்துவிட்டு, அதற்காக எங்கே போகிறார்கள் என்று அவர்களைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அமைச்சர் அதற்கு பதில் அளிக்க முடியாது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் சரியாகத்தான் இருக்கிறார் பதிலிலே, ஆளும் கட்சி உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள், அவரே டாக்டராக இருந்து கொண்டு பாவ புண்ணியங்களுக்குத் தீர்த்தமலை பற்றி விரிவாகக் கேட்டு இருக்கிறார். அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேந்தவரா? அல்லது வேறு இயக்கத்தைச் சேர்ந்தவரா ?

(பதில் இல்லை.).

ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகம்.

வினா எண். 28— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை திருப்பத்தூருக்கு மாற்றி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும் ?

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆலங்காயத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகம், திருப்பத்தூர், வாணியம்பாடி, செங்கம் ஆகிய தாலுக்காக்களுக்கு என வைக்கப்பட்டுள்ளது. ஆலங்காயம் பகுதி ஓரப் பகுதியாக இருப்பதாலும், போக்குவரத்து வசதி குறைந்துள்ள பகுதியாக இருப்பதாலும், அதை மத்தியப் பகுதியான திருப்பத்தூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆலங்காயத்தில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் அங்கேயுள்ள மலைஜாதி மக்களின் நன்மையைக் கருதி அமைக்கப்பட்டு இருந்ததால், அது அங்கேயே தான் இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மலை ஜாதி மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அந்த ஆலங்காயத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தை, பிராந்தியத்தில் உள்ள மக்களுக்குப் பயன்படும் வகையில் திருப்பத்தூரிலோ அல்லது வேலூரிலோ மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேலூரில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வேலூரில் ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. இந்த ஆலங்காயத்தில் உள்ள துணை வேலைவாய்ப்பு அலுவலகம், மலை ஜாதி மக்கள் மற்ற பிராந்திய மக்கள் ஆகியோரின் வசதிக்காகவும் இருப்பதால், அதைத் திருப்பத்தூருக்கு மாற்றி அமைத்தால், மலை ஜாதி மக்களும், பிற பிராந்திய மக்களும் பயன் அடைவர். ஆகவே, அந்த மலை ஜாதி மக்களுக்காக உள்ள அலுவலகத்தை வேலூருடன் சேர்த்தோ அல்லது திருப்பத்தூருக்கு மாற்றவோ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மலைஜாதி மக்களின் நன்மையைக் கருதி அது அமைக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அதைத் திருப்பத்தூருக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, மலை வாழ் மக்களின் நலன் கருதி ஆலங்காயத்தில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் அமைக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். வாணியம்பாடியில் உள்ள மலை வாழ் மக்களும் அங்கே தான் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த அலுவலகத்தை வாணியம்பாடிக்கு மாற்ற அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருந்தோர் எண்ணிக்கை 181 என்று இருந்தது. இப்போது அது 575 என்று உயர்ந்து இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மலைஜாதி மக்கள் இதனால் பயன் அடைந்து இருக்கின்றனர் என்று தெரிகிறது. அதை மாற்ற வேண்டும் என்று கருதினால், அவர்கள் அடைந்து வரும் நன்மையைப் பறிப்பது போல் ஆகும்.

தனியார் தொழிற்சாலைகளில் ஏற்படும் காலியிடங்கள்

*வினா எண் 29— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு நிறுவனங்கள் மூலம் கடன் பெறும் தொழிற்சாலைகளில் ஏற்படும் வேலை வாய்ப்புகளை வேலை தேடித்தரும் அலுவலகம் மூலம் எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இல்லையென்றால், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) எடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 25–9–78 ஆம் நாளிட்ட 1138 ஆம் எண்ணுள்ள அரசாணையில் இதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–20.]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தனியார் சிலர் அரசின் இண்டஸ்டிரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் மூலம் பெருமளவில் நிதி உதவி பெற்று தொழில் நடத்துகிறார்கள். தொழில் நடத்துகிறவர்கள் சொந்தமாகப் போடும் நிதி மிகக் குறைவானது தான். அவர்கள், நிறுவனத்தின் மானேஜர் போன்ற பெரிய